# உலகத் தமிழர் குரல்



விலை ரூபா 1/-

ஒலி 5 ◯ வைகாசி - ஆனி - ஆடி ◯ இதழ் 5


# பண்பாட்டு உலாவில்...

## தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்கள்

உ. த. ப. இயக்கத்தின் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் இயக்க அலுவல்கள் நிமித்தம் மேலை நாடுகள் பலவற்றுக்குச் செல்கின்றார்.

26-07-86 — 15-8-86 வரையிலான காலப்பகுதியில அவர் லண்டன், டென்மார்க் சுவிஸ், பரீஸ், மே. ஜேர்மனி, போன்ற மிகவும் முக்கியமான ஊர்களுக்குச் சென்று வருவாரெனத் தெரிகின்றது. இவர் மேலைநாடுகளில் மூன்று வார காலம் தங்கியிருந்து செயல் படுவார்,

இவர் சென்ற ஆண்டு அக்டோபரில் புதுவை மதுரகவி அவர்களுடன் வட இந்தியச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு ஆந்திரா, மத்தியப்பிரதேசம், உத்தர பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற இடங்களுக்குச் சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

## பல்கலைக் கழகப் பரிசும் உலகத்தமிழர் நூலும்

கோலாலம்பூர் 16-4-86

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்களால் சென்ற ஆண்டு எழுதப்பட்டு, சேலம் மாநகரில் நடந்தேறிய 3வது உலகத் தமிழப் பண்பாட்டு மகாநாட்டில் வெளியிடப்பட்ட "உலகத் தமிழர்" என்ற நூலுக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ரூபா 2500/- சிறப்புப் பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளது. இந்நூலில் உலகில் 55 நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் இனத்தாரின் வரலாற்றுக் குறிப்புகள் பல இடம் பெற்றுள்ளன.

இந்த நூலின் சிறப்பு வெளியீட்டு விழாவொன்று 16.4.86ல் அன்று மலேசியாவின் கோலாலம்பூரில் உள்ள பான் பசிபிக் ஒட்டலில் நடந்தேறியது.

மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. எம் துரைராஜ் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார். மலேசியப் பொதுப் பணித்துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோ ச. சாமிவேலு அவர்கள் நூல் வெளியீட்டுரை நிகழ்த்திச் சிறப்பித்தார்.

நூலாசிரியர் திரு. இர.ந. வீரப்பன் அவர்கள் அணிந்துரை வழங்கினார். திரு பொ. பச்சையப்பன் (துணைத்தலைவர் த. இ. க) பாவலர் பாதாசன் (செயலாலர் ம. த. எ. ச) பொன்னி ந. தியாகராசன் (தலைவர் தமிழ் இலக்கியக்கழ கழகம்) திரு கே. ஆ. சோமசுந்தரம் (செயலாளர் தே.நி.கூ: சங்கம்) பெ. அ. தமிழ்மணி (துணைத்தலைவர் மாஜு ஜெயா கூ. கழகம்) பெ.மு. இளம் வழுதி (து.செயலாளர் த.இ.கழகம்) நா. பச்சையப்பன் த. இ.கஇரா கோவிந்தன் த.இ.க. போன்ற அறிஞர் பெருமக்கள் விழாவில் கலந்து சிறப்புரைகள் வழங்கிலாயினர். மலேசியத் தமிழ் இலக்கியக் கழகம் இவ் விழாவினை சிறப்புற ஒழுங்கு செய்திருந்தமையை விசேடமாகக் குறிப்பிடலாம்.

உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள்

## வாழ்விடங்களைத் தக்கவைப்போம்! தாயகங்களை மீட்டெடுப்போம்

— அரு. கோபாலன் —

இன்றைக்கு அனைத்துலகத் தமிழர்களையும் ஒன்று படுத்தி, தமிழினச் சிக்கல்களை உலகளாவிய அளவில் ஒன்று சேர்ந்து வென்றெடுக்க வேண்டும் என்ற உணர்ச்சி ஒவ்வொரு நாட்டுத் தமிழர்களிடமும் மேலோங்கி வருகிறது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்,

உலகத் தமிழர் மாமன்றம்

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்-எனப்பல அமைப்புகள் இன்று தமிழ்ப் பேசும் மக்களிடையே உலகச் சிந்தனையை ஊட்டும் வண்ணம் உலகளாவிய முறையில் தமிழினச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண முற்பட வேண்டும் என்கிற முனைப்பில் தோன்றியுள்ளன.

(4 ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் குரல்

- எண்ணம் -

வைகாசி ஆனி ஆடி – 2009 – 1986


# இனப்பிரச்சினையும் இந்திய மத்தியஸ்தமும்

இன்று நமது நாட்டில் குறிப்பாக தமிழ்ப்பகுதிகளில் நடாத்தப்பட்டுவரும் மக்கள் விரோத அடாவடித்தனங்களைக், காட்டுமிராண்டிச் செயல்களை, நாகரீக உலகம் ஏற்றுக் கொள்ள முடியுமா? அல்லது பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? நமக்காக இந்தியா கூட ஏதோ உதவுவதாக ஆமை வேகத்தில் செயல்பட்டு வரும் இந்நாளில் இந்த மண்ணில் நாள் தோறும் நடைபெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் இன அழிப்பு இம்சைகள் உலகின் கண்களை இன்னும் ஏன் திறக்கவில்லை? அரச பயங்கரவாதிகளான சிங்கள கூலிப்படைகளால் தமிழ் மக்களுக்கெதிராக இழைக்கப்படும் கொடுமைகள் அநியாயங்கள் புண்ணிய பாரதத்தின் கண்களுக்கு இன்னும் சரியாகப் புலப்படவில்லையா?

இன்றைய காலத்தில் பயங்கரவாதிகளை அடக்குகின்றோம் எனச் சொல்லிக் கொண்டு அரச பயங்கரவாதிகளான சிங்களப் படையினரால் அளவில்லாத துன்பங்கள் தமிழ்ப் பொதுமக்களுக் கெதிராக செய்யப்பட்டு வருகின்றன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடல் பிரதேசத்தில் மீன் பிடிப்பதையே சீவனமாகக் கொண்டுள்ள மீனவத் தமிழர்கள் கடலில் இறங்காமல் தடுக்கப்பட்டுள்ளனர். கரையை அண்டிய பகுதிகளில் மீன் பிடிப்பவர்கள் கூட காட்டுமிராண்டித்தனமான மனித நேயமற்ற முறையில் கொன்றொழிக்கப்பட்டு வருகின்றனர். சமீப காலத்தில் மண்டைதீவுக் கரையில் 30 தமிழர் கொல்லப்பட்டமை இதற்குச் சான்று பகரும்.

இது மட்டுமா, கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் மக்களுக்கெதிரான துன்புறுத்தல்கள் இம்சைகள் கணக்கிலடங்கா! திருகோணமலைப்பிரதேசத்தில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்த அப்பாவித்தமிழர்களில் 90% மானோர் அரச படைகளின் நெருக்குதல் காரணமாக எல்லா ஊர்களிலிருந்தும் முற்றாக விரட்டிக் கலைக்கப்பட்டும் அநேகர் கொல்லப்பட்டுமுள்ளனர். சொந்த ஊர்களை விட்டுப் போக விரும்பாமல் அகதிகளாக எஞ்சி இருப்போரில் அஞ்சி அஞ்சி வாழ்க்கையை ஓட்டிவரும் மக்களில் பல பேர் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கண்மூடித்தனமான முறையில் கூலிப்படையினரால் அழிக்கப்பட்டுவரும் பரிதாப நிலைமை, இன்றைய சோகக் கதையாகும். அங்கே காடுகளில் மேடுகளில் கழனிகளில் நடைபாதைகளில் வீதிகளில் தமிழர் சடலங்கள் கிடப்பதாக அடிக்கடி தகவல்கள் வந்த வண்ணமிருக்கின்றன.

செந்நெல் செழித்துக் கொழிக்கும் வன்னிமண்ணில், மன்னார், வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் பெரும்பாலான விவசாயக் கிராமங்களிலிருந்து தமிழ் விவசாயிகள் தாக்கப்பட்டும் விரட்டப்பட்டும் வருவது வெறும் செய்திகள் அல்ல. அவைகள் கண்ணீர்க் கதைகளாகும்.

இன்னும் சொல்வதானல் வடமாநிலத்தில் பலாலி, மயிலிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, போன்ற மக்கள் நெருங்கி வாழ்ந்து வந்த ஊர்களிலிருந்து மக்கள் பீரங்கித் தாக்குதலுக்காளாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டும் அகதிகளாக்கப்பட்டுவரும் சம்பவங்கள் இன்றைய வடக்கின் நாளாந்தம் செந்நீராக ஓடிவரும் கண்ணீர்க் காவியம்.

வன்முறைகளுக்குப் பயந்து அநாதைகளாக ஏதிலிகளாக ஏதோ உயிர்வாழ வேண்டுமென்ற நப்பாசையால் கடலைக் கடந்து இந்திய மண்ணில் இறங்கிட ஓடுபவர்கள் கூடகடலில் அரச பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழ்ப்பகுதிகளில் நூற்றுக்கு மேற்பட்ட அரசபயங்கரவாத ராணுவ முகாமகள் மக்கள் வாழும் பகுதிகளின் மத்தியில் நிறுவப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஷெல் குண்டுகள் ஏவப்படுதலும் மக்கள் கொல்லப்படுவதும் இன்றைய நாளாந்த நிகழ்வாகும். ஏன் யுத்தத்தில் உபயோகிக்கப்படும் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் நாளாந்தம் தமிழ்மண்ணில் குண்டுகள், பீரங்கிகள் துப்பாக்கிகள் மூலம் சாகசம் புரிந்து உயிர்களை ஏப்பம் விடுகின்றனவே! நமக்காகப் பார்ந்து மத்தியஸ்தம் பேசிவரும் இந்திய அரசுக்கு இவைகள் தெரியவில்லையா?

இத்தகு களேபர நிலைமையால் மக்கள் இன்று உணவு வைத்தியம், போக்குவரத்து மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பற்றுக்குறை, தட்டுப்பாட்டால் துயருறும் இவ்வேளையில், உணவு எரிபொருள், மருந்துவகை விநியோகங்கள் மக்கள் போக்குவரத்துச் சேவைகள், அடிக்கடி பிறப்பிக்கப்படும் அரசகட்டளைகளால் சீர்குலைக்கப்படும் அவல நிலை யாருக்கும் புரியவில்லையா? போக்குவரத்துப் பாதைகள் கூட அடிக்கடி அரச நிர்வாகத்தால் தடுக்கப்படுவதும் தகர்க்கப் படுவதும் பொழுது போக்கு நிகழ்ச்சியாகத் தெரிகின்றது.

எனவே எல்லா விதங்களிலும் தமிழ் மனிதனின் வாழ்வைச் சீர்குலைக்கும். அடிப்படை மனித எரிமை மீறும் செயல்கள் மிகவும் கச்சிதமான முறையில் ஆளவந்தாரால் செய்யப்பட்டு வருவது நமது மத்தியஸ்தர்களுக்குப் புரியவில்லையா? தர்மத்துக்கும் நியாயத்திற்கும் பெயர் பெற்ற நாடான பாரதம் தமிழ்மக்களின் வாழ்வுப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் காலத்தை இழுத்தடித்துக் கொண்டு போவது இங்கு வாழத்துடிக்கு லட்சோப லட்சம் அப்பாவிகளை சொந்த மண்ணில் பலிகொடுக்கும் நிலைமை நாள் தோறும் செய்ய இடமளிக்கு மென்பதை உணரவேண்டும் இங்கே தமிழர்கள் பஞ்சையாய், பராரியாய் அடிமைகளாய் அஞ்சிவாழும் குடிமைகளாய் ஆக்கப்பட்டுவரும் நிலைவரம் நிறுத்தப்படவேண்டுமாயின் இந்திய அரசின் மத்தியஸ்தம் ஆக்கபூர்வமானதாக இருக்கவேண்டும்.

எனவே மேற்கண்ட தமிழ் விரோதக் செயல்கள், இன அழிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டுமாயின் தமிழ் மண்ணிலுள்ள எல்லாவித ராணுவமுகாம்களும் அகற்றப்படவேண்டும். இதை உடனடியாகச் செய்ய நடவடிக்கை மேற் கொள்ள வேண்டிய பாரிய கடமை பாரதத்துக்கு உண்டு. இதைச் செய்ய முடியாவிடின் பாரதத்தின் மத்தியஸ்தம் காட்டிலெறித்த நிலாவாகி விடுமெனக் கூறலாம். இதுவிடயத்தில் தமிழக அரசின் கண்கள் அகலத்திறந்து செயல்படட்டும்.

சுதந்திரம் நமது பிறப்புரிமை சுயநிர்ணய உரிமை நமக்காக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 1986 தொடக்கம் 1988 வரையிலான காலப்பகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்குழு

உலகத்தில் 55 நாடுகளில் வாழ்கின்ற தமிழினத்தாரின் தொடர்புறவுகளையும் 40 நாடுகளில் கிளைகளையும் கொண்டு சிறப்பான முறையில் வளர்ந்து வரும் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் ஆட்சிக் குழுவொன்று சேலம் நகரில் 16-12-85ல் நடந்தேறிய பேரவை மகாநாட்டில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இது 1988ம் ஆண்டுவரை செயற்படும். புதிய குழுவில் இடம் பெறும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உறுப்பினர் பட்டியல் இது:-

தலைவர்.
இர ந. வீரப்பன் - மலேசியா

துணைத்தலைவர்
ஐ. உலகநாதன் - பெங்களூர்

திறுவனர் காப்பாளர்
இரா. கனகரத்தினம் - இலங்கை

பொதுச் செயலர்
அரு. புட்பரதம் - மொறிசியசு

உபதலைவர்
சுப. சுப்பிரமணியன் - அந்தமான்
கி. ஞானசூரியன் இலண்டன்
டக்டர். கோ. சூடாமணி - சேலம்
ப. கு. சண்முகம் - மலேசியா
டி. எஸ். மணி - பர்மா
முல்லைவாணன் - சிங்கப்பூர்

பொருளாளர்
ஐ. இளவழகு - மலேசியா

துணைச் செயலர்கள்
ஆ. சண்முகலிங்கம் - ஈழம்
வீ. மதுரகவி - புதுவை
க. சக்ரபாணி - தமிழகம்
மாசி. அண்ணாமலை - மலேசியா
தாஸ். செட்டி மொறிசியசு
மீ. தேவதாஸ் இலண்டன்

துணைப்பொருளர்கள்
வை. இளந்தமிழன் - சேலம்
ச. செந்துராசா - ஈழம்

நிர்வாகச் செயலர்
பொருளர் திரு. சோலை இருகன் - சேலம்

(சர்வதேசக் கிளைகள் பேராளர் பட்டியல் அடுத்த இதழில் இடம் பெறும்.)

---

# உலகத் தமிழர் கடமை

**ச. செந்துராசா**
**செயலாளர் உ. த. ப. இயக்கம் இலங்கைக்கிளை**

இன்று உலகெங்கும் சகல நாடுகளிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். அதிலும் குறிப்பாக சில நாடுகளில் இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். வேறு சில நாடுகளில் எண்ணிக்கையில் குறைந்திருப்பினும் செல்வத்துடனும் செல்வாக்குடனும் வாழ்கிறார்கள். தமிழகத்தில் ஆட்சி தமிழர்கள் கையில் உள்ளது. பல நாடுகளில் அமைச்சரவையில் தமிழர்கள் செல்வாக்குடன் உள்ளனர். இத்தனை இருந்தும் உலகத் தமிழினத்தின் முன்னேற்றத்தில் எவரும் அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை 5 நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள், இவற்றில் 40 நாடுகளில் எமது அமைப்பின் கிளைகள் உண்டு. இருந்தும் எந்நாட்டிலாவது தனது வாழ்வைத் தானே நிர்ணயிக்கும் அரசியல் அதிகாரம் அவன் கைகளில் உள்ளதா?

வள்ளுவனை விட சிறந்த அறிஞனை சோசலிசவாதியை பாரதியைவிட, பாரதிதாசனை விட ஒரு விடுதலைக்கவிஞனை கம்பனைவிட ஒரு கவிஞனை இன்னமும் இந்த உலகம் பெறவில்லை. ஆனால் இவர்கள் தமிழர்களானதால் இவர்கள் பெருமை உயரவில்லை;

தமிழ் இலக்கியங்களில் போதிக்காத புதிய நெறிகள் எதனையும் வேற்றுநாட்டவர் இன்னமும் எமக்குப் போதிக்கவில்லை. எமது மொழி இலக்கியங்களில் மருத்துவ விஞ்ஞானச் சுவடிகளில் பொதிந்திருக்கும் கருத்துக்களை இன்னமும் நாம் அறியவில்லை. எமது கலைகளின் பெருமை எமக்குத் தெரியவில்லை குடத்து விளக்காக அனைத்தும் உள்ளது வெளிநாடுகளில் குடியேறிய தமிழர்கள் வசதிகள் வாய்ப்புக்களால் தமது திறமைகளை தாம் வாழும் நாடுகளுக்கே அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார்கள்

ஏன் இந்நிலை எமக்கு மறைவாக எமக்குள் உள்ள திறமையினை புலமையினை வெளிக் கொணர எம்மிடம் வலு இல்லை. அதாவது அதிகாரம் இல்லை. உலகில் தமிழனுக்கு எங்காவது ஒரு அரசு அமையுமானல் அதுவே எமது கலைகளை இலக்கியச் செல்வங்களை விஞ்ஞான தொழிநுட்பங்களை உலகுக்கு எடுத்துக் காட்ட வழிசமைக்கும்.

இன்று உலகத் தமிழனுக்கு ஓர் நாடு ஈழத்தில் உருவாகும் சாத்தியம் உள்ளது. உலகில் 55 நாடுகளில் வாழும் நம்மக்கள் தத்தமது நாட்டு அரசுகளை நெருக்கடிக்குள்ளாக்கி ஈழத் தமிழரது போராட்டத்தை ஈழத்தை அங்கீகரிக்கும்படி செய்யத் தூண்ட வேண்டும். அதன் மூலம்தான் உலகத் தமிழரின் கலை, கலாச்சாரங்கள் அவர்தம் எதிர்கால வாழ்வு காப்பாற்றப்படும்.

இஸ்லாமிய மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களிடையே நெருக்கமான தொடர்பு உண்டு பரஸ்பரம் உதவி உண்டு அதனல்தான் இன்று அரேபிய நாடுகள் தலைநிமிர்ந்துள்ளன. அதேபோன்று உலகத் தமிழினமும் சிந்தித்து விழிப்படைந்து செயற்படவில்லையெனில் எதிர் காலத்தில் தமிழினம் அந்நிய மொழிகளை கலாச்சாரத்தால் ஆக்கிரமிக்சப்பட்டு அழிவுறும். இதனைத் தடுக்க உலகத் தமிழினம் ஒன்றுபட வேண்டும். ஈழத் தமிழர் போராட்டத்திற்கு உதவிட வேண்டும்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் அந்தவகையில் செயற்பட வேண்டும்.

# சிக்கனத் தேனிலவு

மலேசியாவில் சிக்கனமாய் திருமணம் செய்து கொள்ள மட்டுமல்ல தேன்நிலவு போய் வரவும் பல டூரிஸ்ட் கம்பெனிகள் உதவுகின்றன.

ஒரு நல்ல முகூர்த்தத்தில் ஐம்பதுக்கு மேற்பட்ட ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகின்றது. அவர்களை ஒன்ருகத் 'தேனிலவுக்கு' அழைத்துச் சென்று வருகின்றன சில கம்பெனிகள்.



ரீடர்ஸ் டைஜெஸ்டிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் குரல் கிடைக்கும் இடங்கள்

அந்தமான்:
*SUBA. SUBRAMANIAM,*
315, Aberdeen Bazaar, Fort Blair Andaman Island
மொரீசியசு:
*M. THANGANAMUTTU* Piton, Mauritius.
மலேஷியா:
*RA. N. VEERAPPAN*
110 Jalan Paugau Barkley Gardens, Kelang Malaysia
சிங்கப்பூர்:
*S. ERIVANAN*
234 Tanjor Pagar Complex Singapore
பீஜி:
*K. APPAPILLAI*
P. O Box No: 779 Suva, Fiji Island
இந்தோனேசியா:
*M S RAMULU* Jin Let. Gen *S. PARMAN*
Kampung Manga 239 C. Medam, Indonesia.
பிரான்ஸ்:
*DEVA. D 36 R. V. A. Pav D92160 Antony France*
தென்னாபிரிக்கா:
*M. ANBAN, House No 102 Road No 729 Rsecliff*
Chatworth, Dnrban Netal 001 South Africa
இலண்டன்:
*K. GNANASOORIYAN*
72, King Edward Road, London E 17, U. K. 01 531 6435
A. PUSPARATHAM
21 Abbe de la Caille Street
Curepipe Road MAURITIUS
S P RAVI
No 23, 3rd Street A S Nagar Ennore
Madras - 57 TAMIL NADU

## உலகத் தமிழர் குரல்
### நன்கொடைகள்

உலகத்தமிழர் குரல் ஏட்டினை பெற விரும்பும் அன்பர்கள் தமது நன்கொடைகளை (பணம்) பின்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

– ஆசிரியர் –
R. THAVAGOPAL
Urumpirai South Urumpirai
SRI LANKA

ஆசிரியர்
ஆ. சண்முகலிங்கம்
பத்திரிகைக்குழு
சி. சற்குருநாதன் ச. செந்துராசா
செ. பரமநாதன் R. தவகோபால்
பொன். பூலோகசிங்கம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி......

## உலகத் தமிழர்களே!

உலகளாவிய முறையில் தமிழர்களை ஒன்றிணைக்க வேண்டும் என்ற இந்த முனைப்பை முதன் முதலில் முன் வைத்தவர் தந்தை ஆதித்தனார் ஆவார்கள்.

இந்தியர், திராவிடர் என்று தமிழர்கள் வேறு மந்தைகளில் ஓடி, தமது சொந்த ஆற்றலை மறந்திருந்த அந்த நாளிலேயே "உலகத் தமிழர்களே ஒன்று படுங்கள்!" என்ற முழக்கத்தை ஓங்கி முழங்கியவர் ஆதித்தனார் ஆவார்.

"நாம் தமிழர்" என்று அவர் தொடங்கிய இயக்கம் கூட.

இந்தியத் தமிழர்
இலங்கைத் தமிழர்
மலேசியத் தமிழர்
பர்மாத் தமிழர்

என்று, பல்வேறு நிலப்பகுதிகளில் பிரிந்து கிடந்த தமிழர்களை,

'உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள்!' என்ற முழக்கத்தையும், 'நாம் தமிழர்' என்ற இயக்கத்தையும், 'தமிழ்ப் பேரரசு' என்ற குறிக்கோளையும் ஆதித்தனார் தமிழ்ப் பேசும் மக்களின் முன் வைத்த நேரத்தில்-

இன்றைய இந்தியாவோ, இலங்கையோ, பர்மாவோ இதே தோற்றத்தில் உருவாகி இருக்கவில்லை.

பரந்து பட்ட பிரிட்டீஸ், பிரஞ்சு, டச்சு ஏகாதிபத்தியங்களின் சாம்ராச்சியங்களுக்குள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆளப்படுபவையாகவே இருந்தன.

உலகின் ஏழு கண்டங்களிலும் பரவிக்கிடந்த இந்த மூன்று சாம்ராச்சியங்களின் எல்லாக் குடியேற்ற நாடுகளிலும் தமிழர்களும் அன்று பரவிக் கிடந்தார்கள்.

எனவே, அன்றைக்கே தமிழ்ப் பேசும் இனம் ஆதித்தனாரின் குரலுக்குச் செவிமடுத்திருக்குமனால், உள்ளபடி உலகளாவிய ஒரு தமிழப்பேரரசை நாம் அமைத்திருக்க முடியும்.

அதுதான் போயிற்று! இந்திய சுதந்திரத்திற்குப் பிறகாவது தமிழினம் விழித்துக் கொண்டதா என்றால், இல்லை

வெளியீடு– உ. த. ப. இயக்கம்
முகவரி– 67, ஸ்ரேசன் வீதி.
யாழ்ப்பாணம்,
தமிழீழம் (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org